செ.வெ.எண்: 39 நாள்:19.08.2021

**நாகப்பட்டினம் நகராட்சியில் உள்ள உழவர் சந்தை, வடக்கு பொய்கைநல்லூர் ஊராட்சி மற்றும் கீழையூர் ஒன்றியம் வேட்டைக்காரனிருப்பு ஊராட்சி பகுதிகளில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளின் தோட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

நாகப்பட்டினம் நகராட்சிக்கு உட்பட்ட உழவர் சந்தையை ஆய்வு செய்த பின் வியாபாரிகளிடம் குறைகளை கேட்டறிந்து அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தருவதாக கூறினார். மேலும், உழவர் சந்தையில் உள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் எடுத்து வருவதாகவும், இப்பகுதியில் உள்ள காய்கறி உற்பத்தியாளர்கள் உழவர் சந்தைக்கு தாங்கள் உற்பத்தி செய்த காய்கறிகளை நேரடியாக கொண்டு வர ஏதுவாக போக்குவரத்து வசதி செய்து தரப்படும் எனவும், உழவர் சந்தையின் மூலம் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் தரமான காய்கறிகள் கிடைக்க உதவியாக இருக்கும் என மாவட்ட ஆட்சியர் கூறினார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தோட்டக்கலை துறையின் கீழ் செயல்படுத்தப்படும், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் (IHDS), பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான நுண்ணீர் பாசனத் திட்டம் (PMKSY), தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் (NADP) ஆகிய திட்ட இனங்களில் பயன்பெற்ற விவசாயிகளின் வயல்களை வடக்குப்பொய்கைநல்லூர், வேட்டைக்காரனிருப்பு கிராமங்களில் இன்று 19.08.2021 மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

வடக்கு பொய்கை நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.சரவணன் என்பவர் ஒருங்கிணைந்த தோட்டக்கலைத் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 50% மானிய உதவியுடன் மா பயிர் பரப்பு விரிவாக்கம், நிரந்தர மண்புழு உரக்கூடாரம், சிப்பம் கட்டும் அறை, நிழல் வலை குடில் மற்றும் பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 100% மானியத்தில் மா பயிருக்கு சொட்டு நீர் பாசனம் அமைத்திருப்பதையும், கீழையூர் வட்டம் வேட்டைக்காரனிருப்பு கிராமத்தில் பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 100% மானியத்தில் மிளகாய் பயிருக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டதையும், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் காய்கறி சாகுபடி பயிற்களான (கொத்தவரை, மிதிபாகல், கத்தரிக்காய், வெண்டைக்காய்) போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டிருப்பதையும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிரந்தர பந்தல் அமைக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு விவசாயிகளிடம் காய்கறி உற்பத்தி மற்றும் விற்பனை குறித்த தகவல்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது தோட்டக்கலை துணை இயக்குநர் திருமதி.நா.கலா, தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் திருமதி.இரா.திவ்யா, செல்வி.க.ஜெயலெட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**